KAYALPATTINAM MUNICIPALITY
FORM 3
Minutes of the Meeting held on 24.01.13

| Date of Council meeting | Decision Number | Subject in the Agenda | Decision of the Council |
|---|---|---|---|
| 29.01.13 | 434 | **பொருள் எண்: 1**<br>காயல்பட்டணம் நகராட்சிப்பகுதிகளில் தெருக்கள் மற்றும் சாலைகளில் பொதுமக்களை பாதிக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ள கழிவு நீர்த்தொட்டிகளை ஆய்வு செய்து அதனை அப்புறப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:-**<br>மன்றம் அனுமதி வழங்கலாம். | நகராட்சி சாலை பகுதியில் கட்டிட விதிகளை மீறி அமைக்கப்பட்டுள்ள கழிவு தொட்டிகளை முறையான அறிவிப்பு செய்து அப்புறப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளமன்றம் தீர்மானிக்கிறது. |
| | 435 | **பொருள் எண்: 2**<br>2012 ஆம் ஆண்டு பருவ மழை சரிவர பெய்யாத காரணத்தினால் குடிநீர் தட்டுப்பாடு நிலை ஏற்படும் நிலையை தடுத்திடும் பொருட்டு அந்தந்த நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் தங்கள் பகுதிகளில் உள்ள நீர்நிலைகளை தூர்வாரி நிலத்தடி நீரை பாதுகாத்திடவேண்டும் என்ற மாவட்ட ஆட்சியர்,தூத்துக்குடி அவர்களின் அறிவுரையின்படி நிலத்தடி நீரை பாதுகாத்திடும் பொருட்டு நமது நகராட்சிப்பகுதிகளில் அரசுக்கு சொந்தமான நீர்நிலைகளை தூர்வார (உப்பாறு உட்பட) நடவடிக்கை எடுக்க வருவாய்த்துறையினரை கேட்டுக்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:-**<br>மன்றம் அனுமதி வழங்கலாம். | மன்றம் அனுமதி வழங்குகிறது. |

| | | | |
|---|---|---|---|
| | 436 | **பொருள் எண்: 3**<br>நகராட்சியில் ஆடு மற்றும் மாடுகளுக்கு அறுக்கப்படும் கட்டணத்தினை உயர்த்த நகராட்சியின் மூலம் செய்தித்தாள்களில் விளம்பரம் செய்யப்பட்டதில் இதுவரை எந்த வித ஆட்சேபனைகளும் வராத காரணத்தினால் ஆடு மற்றும் மாடுகளுக்கு அறுக்கப்படும் கட்டணத்தினை உயர்த்தி மேல் நடவடிக்கை மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:-**<br>மன்றம் அனுமதி வழங்கலாம். | தீர்மானம் எண்:-311-ன்படி கட்டணத்தை அமுல்படுத்தி ஏலம் விட மன்றம் தீர்மானிக்கிறது. |
| | 437 | **பொருள் எண்:- 4**<br>நகராட்சி கடற்கரை பீச்சில் அமைந்துள்ள இரண்டு கழிப்பிடங்களை பொதுமக்கள் பயன்படுத்தும் வகையில் அதனை பழுது பார்க்கவும் மேம்பாடு செய்யவும் நகராட்சிப்பொதுப்பணிமேற்பார்வையாளர் அவர்களால் தயாரிக்கபட்ட உத்தேச மதிப்பீடு ரூ.2.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:-**<br>மன்றம் அனுமதி வழங்கலாம். | கடற்கரை கழிவறையை மேம்பாடு செய்து டெண்டர் விட மன்றம் தீர்மானிக்கிறது. |
| | 438 | **பொருள் எண்:- 5**<br>நகராட்சிப்பகுதிகளில் குடிநீர் குழாய்களில் ஏற்படும் உடைப்புகளை உடனுக்குடன் சரி செய்ய நடவடிக்கை மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:-**<br>மன்றம் அனுமதி வழங்கலாம். | நகராட்சியில் பதிவு செய்த பிளம்பர்கள் மூலம் குடிநீர் குழாய் பழுதுகளை பார்ப்பதற்கு டெணடர் விட மன்றம் தீர்மானிக்கிறது. |
| | 439 | **பொருள் எண்:- 6**<br>நகராட்சியின் முக்கிய இடங்களில் பேரூந்து கால அட்டவணை மற்றும் புகைவண்டி கால அட்டவணை ஆகியவற்றை தனியார் மூலம் நிறுவிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:-**<br>மன்றம் அனுமதி வழங்கலாம். | மன்றம் அனுமதி வழங்குகிறது. |

| | | | |
|---|---|---|---|
| | 440 | **பொருள் எண்: 7**<br>காயல்பட்டணம் நகராட்சியின் மீது தகவல பெறும் உரிமைச்சட்டத்தின் கீழ் தொடுக்கப்படும் வழக்குகள் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நிலையில் இவ்வழக்கு விசாரணைக்கு அடிக்கடி நகராட்சி அலுவலர்கள் சென்னை செல்ல வேண்டியிருப்பதன் நகராட்சிப்பணிகளில் பாதிப்பு ஏற்படுகிறது.. எனவே நகராட்சி சம்பந்தப்பட்ட அனைத்து தகவல்களையும் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் முறையாக ஆவணங்களை பாதுகாத்திடவும் அவைகளை நகராட்சி இணையதளத்தில் உடனுக்குடன் வெளியீடு செய்வது குறித்தும் மன்றத்தில் விவாதித்து முடிவு செய்யக் கேட்டுக்கொண்ட நகர்மன்ற தலைவரின் கடிதம் மன்றத்தின் பார்வைக்கு.<br>**அலுவலக குறிப்பு:-**<br>மன்றம் விவாதித்து முடிவு செய்யலாம். | அரசு விதிமுறைப்படி ஆவணங்களை பாதுகாத்து செயல்பாடுகளை செயல்படுத்த வேண்டியது அரசு அலுவலர்களின் கடமை ஆதலால் இது குறித்த தீர்மானம் நிறைவேற்றாது அவசியமற்றது என மன்றம் முடிவு செய்கிறது. |
| | 441 | **பொருள் எண்:- 8**<br>நகராட்சிப் பகுதியான மங்களவாடியில் உள்ள சுனாமி காலணியில் 70 வீடுகள் உள்ளன. வீடுகளுக்கும் கடலுக்கும் இடையில் 300மீட்டர் இடைவெளி உள்ளது.இங்கு மின் விளக்குகள் இல்லாததால் இரவில் மீன்பிடி தொழிலுக்கு செல்லும் மீனவர்களுக்கு ஆபத்தான சூழல் உள்ளது . ஆகவே மார்ச் 2012 நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படி (தீர்மான எண்178) இப்பகுதியல் மின் விளக்குகள் அமைக்க மதிப்பீடு தயார் செய்து மன்ற ஒப்புதல் வழங்க வேண்டும் என்ற 7வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு.ஜே..அந்தோனி அவர்களின் கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும்.<br>**அலுவலக குறிப்பு:-**<br>மன்றம் பார்வையிட்டு முடிவு செய்யலாம். | வருவாய் துறை மூலம் ஆய்வு செய்து நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் தீர்மானிக்கிறது. |
| | 442 | **பொருள் எண்: 9**<br>ஈக்கியப்பாதைக்காத்தெரு முதல் கறுப்புடையார்பள்ளி வட்டம் (சிங்கித்துறை) வரை மற்றும் கீழநயினார் தெரு பகுதியில் பொது நிதி மூலம் சாலை அமைக்க டெண்டர் விடப்பட்டது.அக்டோபர் 2012 ல் நடந்த சாதாரணக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படி (தீர்மானம் எண்.297) கீழ நெயினார் தெரு பகுதிக்கும் மட்டும் ஒப்புதல் வழங்கப்பட்டு மீத பகுதிக்கு ஒப்புதல் நீக்கப்பட்டது. நீக்கப்பட்டதற்கான காரணம் மீதப்பகுதி தனியாரிடம் உள்ளதாகவும் அந்தப்பகுதியை தனியார் நகராட்சிக்கு எழுதி தரவில்லையென்றும் கூறப்பட்டது.அந்தப்பகுதியில் பொது சாலைக்கான | வருவாய் துறை மூலம் ஆய்வு செய்து நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் தீர்மானிக்கிறது. |

| | | | |
|---|---|---|---|
| | | இடங்களை தனியார் 2007 ஆம் ஆண்டே காயல்பட்டணம் நகராட்சிக்கு எழுதிக்கொடுத்துள்ளார்.அதற்கான ஆவணங்கள் உள்ளன.ஆகவே டெண்டரில் அறிவித்தபடி ஈக்கியப்பா தைக்காத்தெரு முதல் கறுப்புடையார் பள்ளி வட்டம் (சிங்கித்துறை) வரையிலான பாதையிலும் சாலை அமைக்கவேண்டும் என்ற 7வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு.ஜே..அந்தோனி அவர்களின் கடிதம் மன்றத்தின் பார்வைக்கும்<br>**அலுவலக குறிப்பு:-**<br>மன்றம் பார்வையிட்டு முடிவு செய்யலாம். | |
| | 443 | **பொருள் எண்:10**<br>வீர சடைச்சிஅம்மன் கோவில் தெரு முகப்பில் (செயிண்ட் தாமஸ் பள்ளி அருகில்) ஒரு கட் ரோடு சுமார் 100அடி தூரம் விசாலாட்சிஅ ம்மன் கோவில் தெரு வரை தார்சாலையும் அது போல் வீரசடைச்சிஅம்மன் கோவில் தெரு முதல் விசாலாட்சிஅ ம்மன் கோவில் தெரு வரை ஒரு கட் ரோடு சுமார் 100அடி தூரம் ஒரு தார்சாலையும் அமைத்து தரும்படி கேட்டுக்கொண்ட 13வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு.எம்.எஸ்.எம்.சம்சுதின் அவர்களின் கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும்.<br>**அலுவலக குறிப்பு:-**<br>மன்றம் பாாவையிட்டு முடிவு செய்யலாம். | நகராட்சியின் நிதி நிலையை கருத்திற் கொண்டு முன்னுரிமை அடிப்படையில் நடடிவ்கை மேற்கொள்ள மன்றம் தீர்மானிக்கிறது. |
| | 444 | **பொருள் எண்:11**<br>இசக்கியம்மன் கோவில் பின்புறம் 2 சிமெண்ட் மின்கம்பத்தில் மின் விளக்கு புதியதாக பொருத்தித்தருமாறு கேட்டுக்கொண்ட 13வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு.எம்.எஸ்.எம்.சம்சுதின் அவர்களின் கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும்.<br>**அலுவலக குறிப்பு:-**<br>மன்றம் பார்வையிட்டு முடிவு செய்யலாம். | ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் புதிய மின் கட்பங்களை கணக்கீது செய்து மின் விளக்கு பொருத்த தீர்மானம் நிறைவேற்றப்படடு மின்சார வாரியத்திற்கு கடிதம் வழங்க மன்றம் தீர்மானிக்கிறது. |

| | | | |
|---|---|---|---|
| | 445 | **பொருள் எண்:12**<br>காயல்பட்டணம் நகராட்சியின் பொது சுகாதாரத்திற்கு பயன்படுத்தப்படும் வாகனம் TN69 U 6922 ன் டயர்கள் (ஆறு எண்ணம்) மிகவும் பழுதடைந்து விட்படியால் அதனை மாற்றித்தரும்படி கேட்டுக்கொண்ட நகராட்சி பொது சுகாதார வாகன ஓட்டுநர் திரு.வே.இராதாகிருஷ்ணன் அவர்களின் கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும்.<br>**அலுவலக குறிப்பு:-**<br>பொது சுகாதாரப்பணி மிக முக்கியப்பணியாக(டெங்கு) இருப்பதினால் வாகனத்தின் டயர்களை உடன் மாற்றவும் அதற்குரிய செலவினங்களை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். | அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்து. |
| | 446 | **பொருள் எண்: 13**<br>காயல்பட்டணம் நகராட்சியில் பராமரிக்கப்படும் வாகனங்களை பாதுகாத்திடும் பொருட்டு பாதுகாப்பு அறை கட்டுவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:**மனறம் அனுமதி வழங்கலாம். | மன்றம் அனுமதி வழங்குகிறது. |
| | 447 | **பொருள் எண்.14**<br>காயல்பட்டணம் நகராட்சியானது இரண்டாம் நிலை நகராட்சியாக உள்ளது. நகராட்சியின் தற்போதைய மக்கட்தொகை 40542 ஆகும்.நகராட்சியின் மொத்த பரப்பளவு 12.50 சதுர கிலோமீட்டர்.நகராட்சிப்பகுதிகளில் அதிகமான திட்டப்பணிகள் நடப்பதாலும் பல்வேறு ஆய்வுக்கூட்டங்களில் கலந்து கொள்ள வேண்டியிருப்பதாலும் நகராட்சி ஆணையாளர் அவர்களுக்கு தனியாக ஒரு வாகனம் நகராட்சியில் உள்ளது. தற்பொழுது நகராட்சியில் புதிய குடிநீர் மேம்பாட்டுத்திட்டம் செயல்படுத்த இருப்பதாலும் நகர்மனற தலைவர் அவர்களுக்கு தனியாக வாகனம் ஒன்று DGS&D விலையில் பொது நிதியிலிருந்து வாங்குவதற்கு தொகை ரூ.8.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:**DGS&D விலையில் பொது நிதியிலிருந்து வாங்குவதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் அனுமதி பெற்று வாங்கிட மன்றம் அனுமதி வழங்கலாம். | நிதிபற்றாக்குறை காரணமாக மன்றம் அனுமதி வழங்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | 448 | **பொருள் எண்:15**<br>நகராட்சியில் குடிநீர் விநியோகம் பாதிக்கப்படும் இடங்களில் வாகனம் மூலம் குடிநீர் சப்ளை செய்ய நகராட்சியின் மூலம் ஒரு டிராக்டர் வாகனம் DGS&D விலையில் பொது நிதியிலிருந்து வாங்கி அதன்மூலம் குடிநீர் சப்ளை செய்ய நடவடிக்கை மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:**<br>மன்றம் அனுமதி வழங்கலாம் | 6000லி கொள்ளளவு கொண்ட டேங்கும் அதற்கு பொருத்தமான கொண்ட டிராக்டர் என்ஜினும் **DGS&D** கட்டணத்தில் வாங்கிட மன்றம் அனுமதி வழங்குகிறது. |
| | 449 | **பொருள் எண்.16**<br>15 வது வார்டு பகுதியான வடக்கு உச்சிமாகாளியம்மன் தெரு மற்றும் மங்கள விநாயகர் கோயில் தெருக்களில் உள்ள பொதுக்கிணறுகளை தூர்வாரவும் மற்றும் கிணற்றில் மின்மோட்டர்வைத்து தண்ணிா சப்ளை செய்யவும் கேட்டுக்கொண்ட 15வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு.ஜமால் அவர்களின் கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும்.<br>**அலுவலக குறிப்பு:**<br>மன்றம் பார்வையிட்டு அனுமதிக்கலாம். | நகராட்சி எல்லைக்குள் அமைந்துள்ள பொது கிணறுகளை தூர்வார டெண்டர் வி மன்றம் அனுமதி வழங்குகிறது. |
| | 450 | **பொருள் எண்:- 17**<br>நகராட்சிப் பகுதியான கற்புடையார் பள்ளி வட்டத்தில் குடிநீர் விநியோகம் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளதால் புதியதாக சுமார் 450மீட்டர் நீளத்திற்கு குடிநீர் குழாய் பதித்து குடிநீர் விநியோகம் செய்ய பொதுப்பணி மேற்பார்வையாளரால் தயாரிக்கபட்ட உத்தேச மதிப்பீடு ரூ.75000/-க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:-**<br>மன்றம் அனுமதி வழங்கலாம் | மன்ற அனுமதி வழங்குகிறது. |